# (திருமுழுக்கு) / <u>ஞானஸ்நானம்</u> (கிறிஸ்தவ ஆசாரம்)



‘‘ஞானஸ்நானம் இரட்சிக்கப்பட்டவுடன் மறுபடியும் பிறந்தவுடன் ஒருமுறை தனியாக செய்ய வேண்டியது’’

ஒரு நபரைத் தண்ணீரில் முழுக்காட்டுதலாகும்.

‘‘ஒருவருடைய பாவம் கழுவப்படுகிறது என்றும், கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் அவர் ஐக்கியப்படுகிறார் என்றும் அடையாளப் படுத்தப்படுகிறது’’

நற்செய்தியை விசுவாசித்து மனந்திரும்பியவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

விசுவாசத்தினால் கிறிஸ்துவுடன் ஏற்படும் ஐக்கியத்திற்கான அடையாளம்.
கலா 3:27, ரோம 6:3–6

- கிறிஸ்துவுக்கும் நமக்கும் இடையில் உள்ள உறவை குறித்து பேசுகிறது.
- கிறிஸ்து மரணமடைந்து உயிருடன் எழுந்ததை போல கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கும் விசுவாசியும் பாவத்திற்கு மரணமடைந்து அவருக்குள் புதிய வாழ்வு வாழும்படி உயிரோடு எழுந்திருக்கிறார்.
- நாம் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுகிறோம் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது. தீத்து 3:5, 1 கொரி 6:11, அப் 22:16, 2 பேது 3:21.
- ஞானஸ்நானம் உள்ளான மாற்றத்திற்கான வெளியான அடையாளமாக இருக்கிறது.

- கிறிஸ்துவோடு இணைந்தவன் என்பதை வெளிப்படையாகக் காட்டுவதே ஞானஸ்நானம்.
- கிறிஸ்துவின் தலைமைக்கும் அதிகாரத்திற்கும் கீழ்ப்பட்டவன் என்பதைப் பகிரங்கமாக அறிவிக்கிறான்.
- தான் தேவனுடைய பிள்ளை என்பதை ஒரு காட்சிப் பொருளாக அவன் காண்பிக்கிறான்.
- மாம்சமும் அதன் முயற்சியின் மூலமாக நீதியைப் பெற முடியும் என்ற எண்ணமும் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதை வெளிப்படுத்துகிறான்.
- வாழ்க்கையின் முந்தின வழிமுறை முடிவு பெற்றுவிட்டது என்பதையும் புதிதான வாழ்க்கை முறை தொடங்கியிருக்கிறது என்பதையும் தெரிவிக்கிறான்.
- இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியமில்லை எனினும் அது மாற்றுதற்கியலாத வெளிப்படையான அடையாளமாக இருக்கிறது.
- நீரில் பெறுகிற ஞானஸ்நானம் கிறிஸ்துவுக்குள் நமக்கும், ஞானஸ்நானத்திற்கு (அடையாளமாக) காட்சிப் பொருள் விளக்கமாக இருக்கிறது.
- விசுவாசியானவன் மரணத்தின் இருண்ட நீருக்குள்ளாக **(கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் மனிதருக்குள்)** மூழ்குவதையும் புதிதான ஜீவனுள்ளவனாக நடக்கும்படி கிறிஸ்துவுக்குள்ளான புது மனிதனாக எழுவதையும் அது படவுருவில் காட்டுகிறது.





<u>நீருக்குள்ளாக செல்லும்போது</u>

ஆதாமின் பாவமுள்ள மகனாக
சிலுவையில் அறையப்பட்டு
மரித்தேன்

(கிறிஸ்துவோடு மரணத்தின்
சாயலில் இணைக்கப்பட்டவனாக)

<u>நீரிலிருந்து வெளியே வருகிறது போது</u>

பிழைத்திருக்கிறேன்,
இனி நான் அல்ல,
கிறிஸ்துவே எனக்குள்
பிழைத்திருக்கிறார் (கலா 2:20)
(கிறிஸ்துவினுடைய
உயிர்த்தெழுதலின் சாயலில்
இணைக்கப்பட்டவனாக) ரோம 6:3–6